# நீதிசாரத்திரட்டு

(முதற்பாகம்)

மதுரை
சௌராஷ்டிர ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
பு. சிதம்பர புன்னைவனநாத முதலியார்,
இயற்றியது.

மதுரை புத்தகஷாப்பு
P.N. சிதம்பர முதலியார் கம்பெனியார்
பதிப்பித்தது.

காப்பிரைட்] 1919 [அணா 4.

# தந்துரை

'ஓதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை

இம்முதுமொழிப் பொருளுணர்ந்த மக்கள் யாவரும், தாம் கற்கும் நூலறிவை நல்லொழுக்க வழக்கத்தால் மேன்மைப்படுத்தல் அவசியம் என்று அறிந்திருப்பர். ஔவை வள்ளுவராதி தெய்வப்புலமை மிக்காரும் தாம் இயற்றிய நூல்களில் நீதிகளைச் செறித்து உலகை நல்வழிப்படுத்திய மாண்மையைப் பாராட்டாதவர் எவர்?

செய்யுள் நூற் பழக்கங் குன்றியும், உரை நடைப் பழக்கம் தலைசிறந்தும் வரும் இக்காலத்தில், கல்வி சேர்மானக்காரர்களும், எலிமெண்டரிப் பாடசாலை மாணவர்களுக்கு நீதிகளைக் கதாரூபமாக விளக்குகின்றார்கள். எலிமெண்டரிப் படிப்பின் பின், செக்கண்டரிப் [illegible] மாணவர்கள் தாம் கற்

நுட்பமாகக் கற்ற நீதிகளை விவரத்துடன் தெரிந்துகொள்ளவே; மனனிலேக்குத் துணையாமெனக்கருதிப் பலவகை மொழிகளிலுமடங்கியுள்ள நீதிகளின் சாரத்தைத் திரட்டி 'நீதிசாரத்திரட்டு' என வெளிப்படுத்த முற்பட்டனன்.

இம்முதற்பாகத்தில், எனது கலாசாலை மாணவர்களுக்கு உபயோகப்படும்படி, ஆங்கில நீதிநூலினின்று மேற்கொடுக்கப்பட்ட நீதிகள் முதல் 28 பக்கங்களிலும், 'நாலிம்நாமா' எனனும் உருது நீதிநூலில், பணவர் இதோபதேசமாகக் குறிக்கப்பட்ட நீதிகள் பிற பக்கங்களிலும் தமிழ் நூல் மேற்கோள்களுடன், யாவரும் வாசிக்கத்தக்க தெள்ளிய நடையில் எழுதப்பட்டுள்ளன.

எச்சமயத்தோரும் விரும்பி வாசிக்கும் நீதிகளடங்கிய இந்நீதிசாரத்திரட்டை, ஒவ்வொரு கலாசாலையதிகாரிகளும், மாணவர்களுக்கு நீதிபோதனைக்குரிய பாடமாகக்கொண்டு, என்னை ஆதரித்து ஊக்குமாறு அன்புடன் வேண்டுகின்றனன்.

நாதவிலாஸம்
23-6-19.

பண்டிட் P. C. P. நாதன்.

உ

குமரகுருபரன்றுணை.

# நீதிசாரத்திரட்டு.

## பெற்றோர்ப்பேணல்.

"தந்தைதாய்ப் பேண்' 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்ற தெய்வத் திருவாக்குகளுக் கிணங்க, மக்களாகிய நாம் நம்மை வருந்திப்பெற்ற மாதா பிதாக்களுக்கு அன்புடன் மரியாதை செய்தும், அவர்கள் ஏவலுக்குக் கீழ்ப்படிந்தும், முதுமைப்பரு வத்தில் அதாவது அவர்கள் தளர்ந்த வயதுடையவர்க ளானபொழுது, வேண்டிய உதவிகளைச் செய்தும் வரக் கடமைப்பட்டிருக்கின்றோம். நம்மைப் படைத் துக் காத்து, எப்பொழுதும் வேண்டிய யாவும் குறை வின்றி உதவியருளும் வள்ளலாகிய கடவுளை, எவ் விதம் விசுவசித்து, பணிந்து, வழிபடக் கடமைப்பட் டுள்ளோமோ அவ்விதமே, கடவுளைப்போல, நமக்குத் [illegible]

ளக்கூடாத இளமைப் பருவத்தில், கொடுத்துக்காத்த கடவுட் டன்மை பொருந்திய பெற்றோர்களையும், வழிபடவேண்டும்.

* "மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்"
"ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற திருக்குறளுக்கேற்பத் தன்மகனைப் பெற்றகாலத்தில் அடைந்தமகிழ்ச்சியிலும், அதிகமகிழ்ச்சியை, தன் மகன் கல்வி கேள்விகளிற் பெரியவன் என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட காலத்தில் ஓர் தாயானவள் அடைவதைப போலவே, தந்தையும் களிப்படைவார்.

---

## அடக்கம்.

நமக்கு என்ன தெரியும், நாம் எதை விசேஷமாக அறிந்திருக்கிறோம் எனபவைபோன்ற தாழ்மையான அபிப்பிராயத்தை, ஒருவர் மனதிற் கொள்வதற்கு அடக்கம் என்று பெயர்.

---

* திருக்குறள் 7ம் அதிகாரம் 10, 9 செய்யுள்கள்.

() "அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்"

என்ற திருவள்ளுவர் குறளுக்கிணங்க **அம்ப்ரோஸ்** முனிவரும், பெருமைக்குமாறான தாழ்மை, அதாவது அடக்கத்தினாலேயே அழியா முத்தியடையலாம என்று கூறுகிறார்.

"கற்றோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்"

என்றநீதிக்கேற்ப, நிறைந்தகல்விக்கும் ஞானத்திற்கும் அடையாளம் ஒருவர் தம்மைப்பற்றித் தாழ்மையான அபிப்பிராய முடையவராதலோடு, கடவுளினிடத்திலும், மனிதர் முன்னிலையிலும் பணிவுடையவர்களாக இருக்கவேண்டுவது.

---

## கீழ்ப்படிதல்.

கீழ்ப்படிதல், மரியாதை, பயபக்தி, பணிவு முதலிய குணங்கள் அடக்கத்தைச் சேர்ந்தவை. நன்மை இது தீமையிது என்று அறியக்கூடாத இளமைப் பிராயத்தினர், தவறுதலில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்வதற்கு, பெரியோர்கள் கூறும் நல்வழியைக்

---

' திருக்குறள் 13ம் அதி. செய்யுள்.

கடைப்பிடித்து அதன்படி ஒழுகுதலே கீழ்ப்படிதலாம். கீழ்ப்படிதற் குணமானது, பெரியோர்களை நேசிக்கவும், அன்புடன் உபசரிக்கவும், "மூத்தோர் சொல்வார்த்தையமிர்தம்" என்றபடி அவர்கள் கூறும் உபதேசம், புத்திமதி, கண்டனம், நற்போதனை ஆகிய இவைகளைக் கைக்கொண்டு நடப்பதற்கும்; காரணமாகவிருக்கின்றது.

---

## விநயம்.

தெரியாததைத் தெரிந்ததாகப் பகட்டும் பாசாங்கு, மரியாதையின்மை, கேள்விக்குமுன் விடையளித்தல் முதலிய தீக்குணங்களற்ற அடக்கமானது, விநயம்எனப்படும். இவ்விநயமானது மனிதர்யாவரும் விரும்பிப் பாராட்டக்கூடிய சிறந்த குணங்களில் ஒன்றாயிருக்க, மனோவாக்குக்காயங்களில் அதாவது நினைவு வார்த்தை செய்கையிற் சிறந்தவராக நடிக்கும் நாணமற்ற நடத்தையே அவிநயம் அல்லது விநயக்குறைவாகும். இது; ஒருவனுக்குத் தன்னைச் சிறந்த அவதார புருடன் எனக் கருதக்கூடிய கர்வத்தை உண்டாக்கக் கூடியதாதலால், எவ்வகை மனிதரும், விரும்பாத விலக்கக்கூடிய கெட்ட குணங்களில் ஒன்று

## பயபக்தி.

நம்மைவிட அந்தஸ்திலும், மாண்பிலும் மேம்பட்ட பெரியோர்கள் நமக்குமுன் இருந்தாலும், இல்லாவிட்டாலும், சந்தர்ப்பம் ஏற்பட்ட காலங்களில் அவர்களை வார்த்தையாலும், செய்கையாலும், நன்கு மதித்து ஒழுகும் உணர்ச்சியே பயபக்தியாகும். நாம் நமக்கு நேர் மேலதிகாரிகளிடத்தில், எவ்வித பயபக்தியுடன் இருக்கக்கடமைப்பட்டிருக்கிறோமோ. அவ்வித பயபக்தியானது, உத்தியோகம், அந்தஸ்து: நிலைமை, கௌரவம், கல்வி, நல்லொழுக்கம் முதலியவைகளுற்ற பெரியவர்களிடத்திலும், காட்டப்படவேண்டும். ஓர் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணவன் தனது வகுப்பிற்குப் போதிக்கும் உபாத்தியாயருக்கு, எவ்வித மரியாதையைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறானோ அப்படிப்பட்டமரியாதையை அவ்வித்தியாசாலையிலுள்ள மற்ற உபாத்தியாயர்களுக்கும், தகுதிக்குத் தக்கவாறு செய்யக் கடமைப்பட்டிருக்கிறான்.

## உபசாரணைக் குணம்.

ஒருவன் தன்னோடு பழகுபவர் மனதைத் திருப்தி செய்ய வேண்டுமானால், அவரிடத்தில் செம்மையாகவும் தயவாகவும் நடந்துகொள்ளுதலாகிய உபசாரணைக் குணத்தை உடையவனாய் இருக்கவேண்டும் இக் குணமே தங்குதடையற்ற பட்சமான சம்பாஷணையை விருத்திபண்ணுவதால் சமூக மகிழ்ச்சியை, அதாவது ஒருவரோடு ஒருவர் அளவளாவி மகிழ்ந்திருத்தலை, விசேஷமாக அபிவிருத்தி செய்ய ஏதுவாயிருக்கிறது ஒருவன் பிறரிடத்தில் அநாகரீகமாயும், பிரியமில்லாமலும், நடந்துகொள்வானானால் உபசாரணையற்றவன் என்ற பெயரைப்பெறுவதோடு, அவருக்கு அதிருப்தியையும் வருத்தத்தையும் கொடுக்கிறவனாகிறான். மேலும் உபசாரணையின்மை, சமூக ஆனந்தத்திற்கு அத்யாவசியமான பரஸ்பர நல்லெண்ணம் இணக்கம் ஆகிய பந்தங்களைப் பிரிக்கவும் கெடுக்கவும் கூடியதாயிருக்கிறது.

## கலை பயிலல்.

பிள்ளைகள், கல்வி விஷயமாகவும் தங்களுடைய பெற்றோர்களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். பெற்றோர்களின் உதவியால், சிறுபிராயத்தில், குழந்தைகள் கல்வி பயிலுவதில் எவ்வித சிரத்தை யுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அநுகூலத்தையாவது பிரதிகூலத்தையாவது அடையக்கூடியவர்களாகிறார்கள். பிள்ளைகள், பாடசாலைக்கு ஒழுங்காகப்போய், பாடசாலையின் விதிகளையும், நடந்துகொள்ளவேண்டிய முறையையுங் கவனிப்பதுடன், வித்தியா சாலையிலும், வீட்டிலும், தாம் படிக்கவேண்டியவைகளைப் படிப்பதிலும், எழுதவேண்டியவைகளை எழுதுவதிலுமே முழுக் கவனம் உடையவர்களா யிருக்கவேண்டும்.

---

## பரோபகார சிந்தை.

'நல்லாற்றுனடி யருளாள்க "அருளில்லார்க் கவ்வுலகமில்லை' என்ற தமிழ்மறைவாசகங்கட்கு இணங்க, நமக்கு முற்றிலுந்தோற்ற பகைவர்களுடைய தீங்குகளைப் பொருட்படுத்தாமல், அவர்களைப் பக்ஷ

மாய் நடத்த மனங்கொள்வதும், அவர்களுக்குக்கடினமான தண்டனை விதிக்காமல், குறைவான அல்லது சாந்தமான தண்டனையை விதிக்க எண்ணங்கொள்வதும், சத்கிரியைகளைச் செய்ய நாடுவதும், மனதின் நெகிழ்ச்சி அல்லது பரோபகார சிந்தையாகிய கிருபையாலேயாம இது கொடுந்தன்மையாகிய கெட்ட குணத்திற்கு முற்றிலும் மாறானது.

---

## செய்ந்நன்றியறிதல்.

— "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமந் துடைத்தவர் நட்பு"

என்ற உத்தரவேத நீதிக்கிணங்க, நம்மிடத்தில் கிருபைகூர்ந்து, யாதொரு பயனையும் எதிர்பாராது, காலத்தில் உதவி புரிந்துள்ள பரோபகாரிகளிடத்தில் விசுவாசமும் நேசமும் பாராட்டுவதுடன், அவர் நமக்குச் செய்த உதவி தினையளவினதாயினும் அதைப் பனையளவினதாகப் பெருமை பாராட்டி, செய்ந்நன்றி கொன்ற பாதகர்க்கு உய்வில்லையாதலால் நம்மாலியன்ற கைம்மாறு செய்யக் கருதுதல் செய்ந்நன்றியறிதல் எனப்படும்.

---

திருக்குறள் 11ம் அதி. 7ம் செய்யுள்.

"செய்யாமற்செய்த உதவிக்கு
வையகமும்வானகமு மாற்ற லரிது."

என்றதற்கேற்ப ஒருவர் செய்த நன்றிக்கு, அன்பான வார்த்தை செய்கைகளால், சரியான கைம்மாறு செய்யக்கூடாததெனினும், குறைந்த பக்ஷம் அவரை மதித்து அன்புபாராட்டுதலும், அவருடையக்ஷேமலாபங்களில் விசேஷ கருத்துடையவராய்க் கடவுளை அவர்க்குச் சுகவாழ்வருள வேண்டுதலுமே, கைம்மாறு செய்வனவாம். நமதுமுக்கிய பரோபகாரிகளாக மதிக்கப்படும் §"அரசன் உபாத்தியாயன் தாய்தந்தை தம்முன்பிகரில் குரவரிவரைத்தேவரைப்போலத்தொழுதெழுக" என்றபடி, அவர்களிடம் நாம் பெற்றுள்ளதும், பெறப்போவதுமான விசேஷ உதவிக்காக அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுளோம். "உதவிவரைத்தன்றுதவி,உதவி,செயப்பட்டார் சால்பின்வரைத்து" என்ற பெருநாவலர் மொழிக்கிணங்க, இடையறாத ஊற்றுப் பெருக்கைப் போன்று உள்ளத்தில் தோன்றும் உண்மையான செய்ந்நன்றி யறிதலுடையார்;

‡ திருக்குறள் 11ம் அதி. 1ம் செய்யுள்.

§ ஆசாரக்கோவை 17ம் செய்யுள்.

தமக்குப் பிறர்செய்த நன்றியின் நன்மையைக் கடலினும் பெரிதாகமதித்து, தாம் செய்யும் பிரதியுபகாரம் அவருதவிக்கு ஒருபொழுதும் சமமாகாதென்று சமயம் வாய்ந்தபொழுதெல்லாம் 'நன்றி மறப்பது நன்றன்று' ஆதலின், தம் நன்றியறிதற் கடனைச் சிறிதுங் குன்றாத மகிழ்ச்சியுடன் செலுத்துவதிலேயே கருத்துடையவர்களா யிருக்கிறார்கள்.

---

## மடிமை.

'ஊக்கம் உடைமையாக்கத்திற் கழகு' என்றபடி, நாம் ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கு அவசியமான ஊக்கத்தை நம்மிற் கெடுத்து, கருதிய கருமத்தைச் செய்யுங்காலத்தில், அதிகச்சோம்பலை உண்டாக்குங் குணமே, மடி அல்லது சுறுசுறுப் பின்மையாம். 'மடியுடையார் மாண்பய னெய்தலரிது' என்றவாசகப்படி, முத்திக்குக்காரணமான கடவுள் வழிபாட்டில் வெறுப்பையும், நமது ஜீவியநன்முயற்சியில் அருவருப்பையும் உண்டுபண்ணி நம்மைக் குற்றவாளியாக்குவதும் இத்தீய குணமே.

## நடையுடை பாவனை.

உன்னிலும் தாழ்ந்தவர்களையும் அவர்கள் தகுதிக்கு ஏற்ற மரியாதையுடன் நடத்து. உன்னைவிடத் தாழ்ந்தவர் அல்லது உன்னுடைய கீழ் உத்தியோகஸ்தரிடம் தெரிந்துகொள்ளவேண்டிய அல்லது தெரிவிக்கவேண்டிய விஷயம் சொற்பமாயிருந்தாலல்லாமல், அவர்களை உனது ஏவலாளரைப்போல் நிற்கவைத்துவிட்டு, நீ ஆசனத்தில் அமர்ந்திராதே.

சுயநயம் பாராட்டல், கர்வம், கெட்ட சுபாவங்களில்லாமலிரு. வார்த்தையால் அல்லது செய்கையால் எவர் மனதையும் வருந்தச்செய்யாதே. பிறரிடத்தில் ஈகை, இரக்கம், தயாளம் முதலிய நற்குணங்கள் உடையவனாயிரு.

உள்ளதை உள்ளபடி சொல்லும் நேர்மைக் குணமுடையவனாயிரு. பின்னால் தலைகுனிந்து நிற்கவேண்டிய செய்கைகளைச் செய்யாமலும், சொற்களைச் சொல்லாமலுங் கவனமாயிரு. சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்காதலின், எப்பொழுதும் சத்தியத்தையே பேசு. ஒருவருக்குத் திடீரென்று வாக்குறுதி கொடுத்துவிடாமல், யோசித்துச் செய்வ

துடன், அந்த வாக்குறுதியைக் காப்பாற்றி நிறைவேற்றுவதில் நாணயஸ்தனயிரு. ஒருபொழுதுங் குறித்த காலத்திட்டத்திற்குப் பிந்தி வாராதே. சிறுவரை விசேஷமாய்க் கெடுக்கக்கூடிய கெட்டபுஸ்தகம் துர்நடத்தை, துர்ச்சகவாசங்களை நீக்கிவிடு.

தெய்வீகத்திற் கடுத்தது சுத்தமுடைமையாதலால், உனது தேகம், உடை, புஸ்தகங்கள், வீடு முதலிய சுற்றுப்பாகங்களையும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் வைத்துக்கொள். அடுத்தவர் கடிதத்தை அல்லது பத்திரிகையை உற்றுப்பார்த்தல், சன்னல்வழியாகவோ, தாழ்வாரத்திற் சென்றோ பார்க்கத் தகாத விஷேதங்களைப் பார்த்தல், முதலியவைகளைச் செய்யாதே.

நீ வெளியே போகும்பொழுது நடை, உடை, பாவனையில் மரியாதையாயிருப்பதுடன் பராக்குப் பாராமல், மெதுவாக நட. ஜனங்களை நெருக்கிக் கொண்டு முன்செல்லாதே. யாரையாவது ஒருவரை அவர் வீட்டிற் பார்க்கப்போனபொழுது கதவு அடைத்திருந்தால் இரண்டொரு தட்டுகளை மெதுவாகத் தட்டு, அதற்கும் பதிலில்லையானால் சும்மா

போய்விடு. ஒரு வீட்டுக் கதவைச் சாத்திவர நேரிட்டால், அதிக சப்தமுண்டாகும்படி பலமாகச் சாத்தாமல் மெதுவாகச் சாத்திவா.

நீ பிறருடன் கடிதப் போக்குவரத்துச் செய்யுங் காலத்தில் உனது கடிதங்களைச் சுத்தமாகவும் தெளிவாகவும் எழுதுவதிலும், அவர்களுடைய கடிதங்களுக்குப் பதிலைத் தாமதியாமல் எழுதியனுப்புவதிலும்; கவனமாயிரு. நீ ஒருவரைச் சந்திக்குங் காலத்தும் பிரியுங் காலத்தும் பகற்பொழுதாயின், காலத்துக்கேற்றபடி காலைவந்தனம், மதியவந்தனம், மாலைவந்தனம் என்றும்; இரவாயின், பிரிந்துசெல்லுங் காலத்தில் மட்டும், இரவு வந்தனம் என்றும் சொல். உனது நண்பனை அல்லது உன்னோடு பழகியவனைச் சந்தித்தபொழுது, இராமபிரான் தனது குடிகளைக் கண்டக்கால் விசாரித்ததுபோல,

* "எதுவினை யிடரிலை யினிதிநு மனையும்
மதிதரு குமரரும் வலியா கொல்" க்ஷேமமா என்றும், பிரியும்பொழுது, கடவுள் துணையாக என்றும் கூறு.

---

* கம்பராமாயணம் திருவவதாரப்படலம் 135ம் செய்யுள்.

மரியாதைமிக்க பிள்ளைகள்; பிறர் கேள்விக்கு, ஆம் ஐயா, இல்லை ஐயா என்றே பதில் சொல்வார்கள். ஆம், இல்லை, என்று மட்டும் பதில் அளிப்பது கொச்சையும முரட்டுத்தனமுமானது.

ஒருவரிடத்தில், ஏதாவதொன்றைப்பெற வேண்டும்பொழுது, முதலிலாவது கடைசியிலாவது, 'தயவு செய்யுங்கள்' என்னும். அங்ஙனம் அவரிடம் கேட்டதைப்பெற்றதும், 'தங்களுக்கு நமஸ்காரம்' என்றும் சொல்லத்தவறாதே. எவருடன் பேசும்பொழுதும், அவர்முகத்தைப்பார்த்து, திருத்தமாகவும், மெதுவாகவும் பேசு. அளவுக்கு மிஞ்சிப் பேசாமலும் கெட்ட வார்த்தைகள் கதைகள் பாட்டுகளுக்குச் செவி கொடாமலுமிரு. முன்பின் தெரியாத ஒருவனது, குலம், தொழில், சம்பளம், பிள்ளைகுட்டிகள் முதலியவற்றைக் கேட்டு விசாரிப்பதால் அவனைப் பயமுறுத்தாதே.

---

## மௌனம்.

அடியில் வருங் காரணங்களால் பேசுவதைவிடப் பேசாமலிருத்தலே (மௌனமே) மேலானது.

§ "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

---

§ திருக்குறள் 13ம் அதி. 7ம் செய்யுள்.

என்ற பொய்யாமொழிப்படி மௌனமானது பொய், தற்புகழ்ச்சி, முகஸ்துதி, புறங்கூறல், பரிகாசம், ஊழலும் வடுமான பேச்சு முதலிய நாவினால் ஏற்படும் தீமைகளை எல்லாம் உண்டாகாமல் காத்துக் கொள்ளுகிறது.

"மோன மென்பது ஞான வரம்பு" என்ற மூதாட்டியார் முதுமொழிக்கிணங்க, மேலான சிறந்த பரிசுத்த எண்ணங்களுக்குக் காரணபூதமா யுள்ளது; புகழப்படும் மௌனமேயென டயடக்ஸ் முனிவரும் கூறுவதால், அமைதியே ஜெப தியானங்கட்கு அநுகூலமானது.

உனக்கு விரோதமாக, யாராவது கடூரமான நிந்தை மொழிகளைப் பேசும்பொழுது, அதை நீ கேளாதவன்போல, பதில்சொல்லாமல் மௌனமா யிருந்தால், அது, உனது பொறுமையையும், தன்னடக்கத்தையும் விளக்கிப் பண்ணக்கூடியதாயிருக்கிறது

அற்பமான சம்பாஷணையிலும், தீங்கான பேச்சிலும் வீணாகிற காலத்தை, மௌனமானது; வந்தனை, கல்வி, உத்தியோகக் கடமைகள், குடும்ப காரியங்கள்,

தர்ம கைங்கரியங்கள் முதலிய சத்காலக்ஷேபங்களிற் கழியச்செய்கிறது.

பொதுவிஷயமான பேச்சு, பிரசங்கம், மதச்சடங்குகள் நடைபெறும்பொழுதும், பாடசாலையிற் பாடம் படிக்கும்போதும், பாடங் கேட்கும்போதும், பேசாமலிருத்தல்; ஒழுங்கையும் நற்பழக்கத்தையும் அபிவிருத்தி செய்கிறது.

சிறுவரானவர், மூத்தோர்கள், அதிகாரிகள் முன்னிலையில் வாய்பேசாதிருத்தல், அவர்களுக்குரிய மரியாதையைச் செய்ததாவதோடு, நன்னடக்கை, விநயம் முதலிய குணங்களையும் காட்டுகிறது.

பேச்சின்மையானது; நமது சிநேகிதரின் அந்தரங்கத்தை வெளியிடாததால் அவர் நட்பை உறுதிப்படுத்துவதுடன் நமது ரகசியத்தை வெளியிடாததால் நம்முடைய பகைவரைப் பயமடையச் செய்வதற்கும், அநுகூலமாயிருக்கிறது.

மௌனமானது அறிவாளிகளுக்கு மகத்துவத்தை யளிப்பதுடன் அவர்களை, அவசிய மேற்பட்ட பொழுது முன் யோசனையுடன் அடக்கமுடையவராக

ளாக இருக்கவும் செய்கிறது. மேலும் அவர்களை, மற்றவர்கள் மதித்துக் கௌரவப்படுத்தும்படியுஞ் செய்கிறது.

அமைதியானது மூடரையும் ஞானியாக நினைக்கச் செய்வதுடன் அவர்களைத் தப்பிதம், கலக்கம் அவமதிப்பு முதலியவைகளினின்றும் காத்துக்கொள்ளவும் செய்கிறது நமது சுகதுக்கக் குறிகளை மௌனமானது, பேச்சைவிடப் பலமாகப் புலப்படுத்துகிறது.

## பேச்சின் ஒழுங்கு.

1. ஒழுங்கற்றதும், பேசக்கூடாததுமான விஷயங்களைப் பேசாமல், நல்ல, சரியான பேச்சுக்களையே பேசவேண்டும்.

2 நமது சம்பாஷணையின் நோக்கும் போக்கும் நன்மைக்கும் நீதிக்கும் அடுத்தவைகளாயிருக்கவேண்டும்.

3. பேசுகிறவர், தம் நிலைமையையும், பேச்சைக் கேட்பவர் தன்மையையும், பேசுமிடத்தி லுள்ளவர்களின் இயல்பையும் அறிந்து பேசவேண்டும்.

4. பேசவேண்டிய காலம் அறிந்தே, பேச வேண்டும்.

5 பேசப்படும் விஷயத்தை, முன்னதாகவே நன்றாக யோசித்துக்கொண்டு, பின்னா பேசக் கருத வேண்டும்

6. மற்றவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அதற்கு இடைஞ்சல் செய்யாமலிருக்கவேண்டும்.

7. நசம் கேட்கப்பட்டாலன்றி ஒருவருக்குப் பதில் அளிக்காமலிருக்கவேண்டும்.

8. நாமே ஒன்றைப் பேச விரும்புவதிலும் பிறர் பேசுவதைக் கேட்க ஆவலுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

9. வேண்டிய அளவிற்கு அதிகம் பேசுதலான அநாகரிகமாதலால், வரம்புகடந்து பேசாமலிருக்க வேண்டும்.

10 பேச்சு, இசை, நடை,-உடை பாவனைகளில் அநாகரிகமாயிருத்தல் முதலிய குணங்களையும் அகற்றி, பிறர் மனதை வசீகரிக்கக்கூடிய இன்பமிக்க இன்சொற்களைப் பேச எத்தனிக்கவேண்டும்.

# சகோதரத்வம்.

பகைக்கும் பெருமைக்கும் மாறான சகோதரத்வம் அதாவது அயலாரையும் அன்புடன் நேசித்தலாவது, அவர் நல்வாழ்வில் சந்தோஷங் கொள்ளுதலும் அவர் தரித்திர திசையில்வருத்தமடைதலுமாம். மேலும் அது, நம்மா லியன்ற அளவு, அவருடைய துயரத்தை நீக்குவதில் அவருக்கு யாதொருவிதமான கஷ்டமும் கேடும் உண்டாகாதபடி பார்த்துக்கொள்வதுடன் அவருடைய சுகத்தையும் விருத்திபண்ணுகிறது.

சகோதரத்வத்தின் குணங்கள் பொதுவும், சிறப்பும் என இருவகைப்படும்.

1. பொதுக்குணங்களில் முக்கியமானவை:-காருண்யம்.—அதாவது இயற்கைப் பிரியம்.

2. பரோபகாரம்.— அதாவது நல்லதைச்செய்யும் தன்மை அல்லது நம்மைப்போன்ற உயிர்களிடத்து உள்ள அன்பினால், அவைகளின் சுகத்தை விருத்திபண்ண விரும்புதல்.

3. சத்கருமம்,— அதாவது நல்லகாரியத்தைச் செய்தல் அல்லது அடுத்தவர்களுக்கு நன்மை செய்யப்பழகுதல்.

4. ஜீவோபகாரம்— அதாவது மனிதர்களிடத்தில் அன்பாயிருத்தல் அல்லது மனிதவருக்கத்தினருக்கெல்லாம் பரோபகாரத்தையே செய்தல்.

5. சுயநயம்பாராட்டாமை அதாவது தந்நயம் பாராட்டாமல் பிறர் நன்மையே கருதி அடுத்தவர்களின் நன்மைக்காக உழைத்து வாழ்தல்.

சகோதரத்வத்தின் சிறப்புக்குணங்களில் முக்கியமானவை அநுதாபம்; இரக்கம், மனுஷத்வம், வண்மை அல்லது தயாளத்வம், சாந்தம், கிருபை முதலியனவே.

'அன்பின் வழியதுயிர்நிலை' என்றபடி மக்களாகப் பிறந்த தம்மைப்போன்ற பிறவுயிர்களுடைய சுகாசுகத்தைத் தம்முடையதாகவே மதித்து அவர் க்ஷேமகாலத்தில் அவருடன் கலந்து மகிழ்தலும் அவருடைய க்ஷேமக்குறைவு அல்லது துக்ககாலத்தில் அவருடன் கலந்து துக்கங்கொண்டாடுதலும் அநுதாபமெனப்படும் சகோதரவாஞ்சையின் பயனாகவே அநுதாபம் ஏற்படுவதால், அது சகோதரத்வத்தை விருத்திசெய்கிறதுடன், சமுதாயமகிழ்ச்சிக்கும் முக்கிய காரணமாகிறது.

அடுத்தவர்கள் படுந்துயரத்தைக்கண்டு அது நமக்கே வந்ததுபோல நினைத்து, அவர்களுடைய கஷ்டத்திற்காகப் பரிவுகூர்தல் இரக்கம் அல்லது உருக்கமாம்.

'அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு' 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற குறளடிகளின் படி, தம்முயிரைப்போலவே மன்னுயிரையும் மதித்து ஒழுகுங் குணமே மனுஷத்வம். இக்குணம் மற்றவர்கள் வியாதியிலாவது, அபாயத்திலாவது, வருந்தும் பொழுது அவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்ய நம்மைக் கட்டுப்படுத்தித் தூண்டுகிறது

'வறியார்க்கொன்றீவதே ஈகை' என்றகற்கிணங்க ஆதரவற்றதரித்திரர்களுக்குத்தர்மங் கொடுத்துக்காப் பாற்றுவதே தயாளத்துவமாம்.

நமது ஆட்சிக்கும் அதிகாரத்துக்குங் கீழ்ப்பட்டவர்களிடத்தில் கிருபை கண்ணோட்டமுடைமை சாந்தம் எனப்படும். "ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந்து யார்மாட்டுந் தேர்ந்து செய்வஃதேமுறை" 'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல், மன்னுவா மன்னர்க்கொளி' என்றுபொய்யா மொழிக்கிணை

ங்க, கொடுங்கோன் மன்னனின் நின்று பிரித்தோப்ப டும் நடுவு நிலைபிறழாத செங்கோன் மன்னனுடைய பரோபகார சிந்தைக்கும் காரணமாவது இச்சாந்த குணமே.

---

## ஆள்வினை.

சிலர் தாம் இவ்வுலகத்தில் பிறந்திருப்பதானது உண்டு, குடித்து, உறங்கி, ஒழியாத சுகத்தையும் சௌகரியததையும் அநுபவித்தற் கன்றி உழைப்ப தற் கில்லையென்று நினைத்து காலங் கழித்துவருகிறார் கள். ஆனால் நன்முயற்சியால் தூண்டப்படும் ஆஸ்தி வந்தனை "முயற்சி திருவினையாக்கும்" என்பதை யுணர்ந்து மனிதாக் குரித்தல்லாத மடியை வெறுப்ப துடன், ஆஸ்தி ஐஸ்வரியமுடையவர் செய்யவேண் டியவைகளிவை யென்பதை நினைவு கூர்வானாகில்,

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி"

என்ற குறளுட்பத்தை யுணர்ந்தவனாய், குறைந்த ஐஸ்வரிய முடையவனைவிட அதிக உழைப்பைக் கொள்ளும் உணர்ச்சியுடையவனாகிறான்.

## தன்முயற்சி.

அடுத்தவரை யண்டிப் பிழைக்கும், சில சோம்பேறிகள்

"அறிவினாற் காற்றொழி லென்று; கருதற்க"
கையினால், மேற்றொழிலு மாங்கே மிகும்

என்ற நீதிப்பொரு ளுணராதவராய், தங்களுடைய அந்தஸ்துக்கும் நிலைமைக்கும் குறைவாகக் காணப்படும் சிறுதொழிலைச் செய்து ஜீவித்தல் கேவலமென மதிக்கிறார்களன்றி, தங்களுக்கு எவ்வளவு நெருக்கமான பந்துவாயிருப்பினும், 'ஏற்பதிகழ்ச்சி' என்றதை யுணராமல் அவருடைய கையையே யெதிர்பார்த்துத் தாம் சோம்பேறியாயிருப்பது, பெண்பிள்ளை வாழ்க்கைக்கு ஒப்பாகுமென்று கிஞ்சித்தும் உணர்கிறார்களில்லை

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்"

என்ற நன்மொழிக்கிணங்க, நமது சரீரப் பிரயாசையால் கிடைக்கும் எளிய சாப்பாடானது, அடுத்தவர் நன்கொடையாக அளிக்கும் சம்பிரமமான சாப்பாட்

டினும் சிறந்ததாகவும், அடுத்தவருக்கும் பாரமாயில்லாமல்-அதாவது நாம் செய்து கழிக்கவேண்டியதைச் செய்யாமல்-அடுத்தவருக்கு இரட்டிப்பு வேலையை உண்டுபண்ணுவது ஆண்மையில்லாததாகவும், இருக்கிறது. 'நம்கையே நமக்குதவி'யாயிருப்பின், அடுத்தவரை யெதிர்பாராமலே நம் கடமையைச் செய்யக் கற்றுக்கொள்ளலாம் சோம்பேறிச் சார்புக்குச் சரியான மாற்று தன்முயற்சித்தத்வமே.

## அன்னதானம்.

ஏதாவது தொழிலைச் செய்து தங்கள் காலக்ஷேபத்தை நன்கு கழிக்குந் திறமைவாய்ந்த நம்மினிய சோம்பேறிகளாகிய நெஞ்சிற் றுறவாது துறந்தார்போல் வஞ்சித்து வாழும் வன்கண்ணராகிய ஆண்டி, யாசகர்களை ஆதரித்து அன்னமிடுவது 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்ற பழமொழிக்குத் தவறுதலான தர்மமேயாம். இவ்வாறு தக்கார்க்கு அளிக்கப்படாத தர்மமானது,-நம்மவரில் ஊக்கத்துடன் உழைத்துப் பிறாக்கும் பயன்படக்கூடியவர்களையும் சோம்பேறிகளாக்கி, துன்மார்க்க வாழ்க்கைக் கொண்டொழுகச் செய்கிறது

## வீண்காலம்.

"செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்ற நீதிவாக்கியத்திற்கு இலக்கியமாக, சில சோம்பலாளிகள், மேலான சிறந்த விஷயங்களையடைவதில் உபயோகப் படுத்தக்கூடிய, காலம் ஊக்கம், சாமர்த்தியங்களை வீணாக்கித், தங்களைப், பிரதானமான தொழில்களை யெடுத்துக் கையாளவோ அல்லது சிறந்த காரியங்களை முடித்துக் கொள்ளவோ, தகுதியற்றவர்களாக்கிக் கொள்கிறார்கள். ஓராசிரியர், இவர்கள் ஜீவப்பிரயத்தனத்தை பரந்தகன்ற, பாழ்ந்தரிசுக்கு—அல்லது விழலுக்கிறைத்த நீருக்கு ஒப்பிடுகிறார்.

---

## பின்முயற்சி.

சில சோம்பல்மிக்கமானவர்கள், வருஷமுற்றும் குன்றாத நிலைபெற்ற சுறுசுறுப்புடன் வாசிக்கவேண்டியவைகளை வாசிக்காமலிருந்துவிட்டு, வருஷத்தின்ஏதாவது ஒருபருவத்தில் சிலகாலும் கடுமையான உழைப்பை யெடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் சாதாரண

மாய்த் தாங்கள் படிக்கவேண்டிய அப்பியாசங்களையும் காலத்தில் அசட்டை பண்ணிய குற்றத்தினால் கலாசாலை அல்லது பகிரங்க பரீக்ஷைகாலத்தில், தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள இரவுபகலாய் வருந்தியுழைக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

---

## நித்திரை

சாதாரணமாய் ஒரு மனிதன் ஒருநாளில் இருபத்திநாலுமணி நேரத்தில், தூங்கவேண்டிய காலமாகிய ஏழு, அல்லது எட்டுமணி நேரத்தைவிடுத்து, அதற்கு அதிகமாகத் தூங்குவதால் சுகக்கேட்டிற்கும் உள்ளாகிறான். இளமையும், ஓயாத மூளைப்பயிற்சியுமுடையமாணவர்க்கு நித்திரை அத்தியாவசியமானது. அவர்களுக்கு நித்திரைக் குறைவினால் ஏற்படும் கேடு மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கும்.

ஓர் நாளில் ஒரு மாணாக்கன் சாதாரணமாக ஏழுமணி நேரத்திற்குக் குறைவாகத் தூங்குவது சுகக்கேட்டிற்குக் காரணமாகவும், எட்டுமணி நேரத்திற்கு அதிகமாகத் தூங்குவது அவனிடத்திலுள்ள சோம்பலுக்கு அறிகுறியாகவுமிருக்கிறது. நித்திரைக்கேற்ற

காலம், மாலை 9 மணிமுதல் காலை 5 மணி வரையுமே யாதலால், தனது சுகவாழ்விற் கருத்துடையவனா யிருக்கும் மாணவன் இரவு 10 மணிக்கு முன்னாலே நித்திரைக்குப்போய் காலை 5 மணிக்குப் பிந்தாது நித்திரைவிட்டெழவேண்டும். பரீக்ஷைக்குப் பாடம் தயாராக்குங்காலத்தில், இவ்விதியை மீறி நடக்கு மாணவர்க்குத் துணிவுண்டாகுமாதலால், அக்காலத் தில்தான் மாணவர்கள் அதிகமாய் இவ்விதியைப் பின் பற்ற முயலவேண்டும்

சாமத்திற்குமுன் (இரவு பன்னிரண்டு மணிக்கு முன்) ஒருமணி நேரம் நித்திரைகொள்வது அதன் பின் இரண்டு மணிநேரம் தூங்குவதற்குச் சமமாகு மென்பதை யறியாத மாணவன் தூங்கவேண்டிய காலத்தில் தூங்காமலும், களைப்படைந்த மூளையை இளைப்பாற விடாமலும், அதிக சிரமத்துடன் கண் விழித்துக்கொண்டிருக்கிறான். ஆதலால் அகாலத் தில் படிப்பதை, உணரக்கூடாதவனா யிருப்பதுடன் படித்ததிலும் கொஞ்சமே ஞாபக முடையவனாயிருக் கிறான். மேலும் அவனது அலுத்துக் கலங்கிய மூளை பகலில் படிக்கக்கூடிய படிப்பிற்கும் யோக்கியதை யில்லாமற் போய்விடுகிறது.

## தேகாப்பியாசம்

தேகாப்பியாசம் தேகத்திற்குச் சுகம், பலம், சுறுசுறுப்பு முதலியவற்றைக் கொடுத்தும், மூளையைப் பலப்படுத்தியும் மனதைக் களிப்படையச்செய்து ஊக்கத்தை யுயர்த்தியும், மூளை சம்பந்தமான வேலைகள் சுறுசுறுப்பாகவும் சுகமாகவும் நடைபெறச் செய்கிறது விளையாட்டில்லா வீண் வேலை மந்த புத்தியை விருத்திசெய்யும் என்ற ஆங்கிலப் பழமொழி, மாணவர்க்குத் தேகாப்பியாசம் அத்யாவசியம் என்று நன்கு விளக்குகிறது.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்' என்றபடி வரம்புகடந்த தேகாப்பியாசத்தால் ஏற்பட்ட களைப்பு மூளையைத்தாக்கி, கொஞ்சகாலத்திற்கு அதைச் சரியான வேலை செய்யவொட்டாதபடி பலத்தைக் குறைத்துவிடும். மேலும் விளையாட்டில் விசேஷப் பிரியம்கொள்ளுதல் மனக்கலக்கத்தையும் படிப்பில் வெறுப்பையும் உண்டுபண்ணுகிறது அளவுக்கு மிஞ்சி இளைப்பாறுதலினுடைய பெருங்கேடானது, கல்வி தொழில் ஜெபம் முதலிய நன்மை தரத்தக்க பிரவிருத்திகளில் உபயோகப்படக்கூடிய அருமையான காலத்தை வீணாக்குதலாம்.

உ

குமாரகுருபரன் றுணை.

# மாணவர் நீதிபோதனை.

## [உருது மொழிபெயர்ப்பு]

### முதலாவது இயல்

(வைகறையில் எழுந்திருத்தல் படித்தல் இவற்றைப்பற்றியது)

அதிகாலையில் எழுந்திருந்து கால் கை முகம் கழுவுதலாகிய நித்ய கர்மானுஷ்டானங்களைச் சரிவர முடித்துக்கொண்டு, பின்னர் கடவுளைத் தியானிக்க வேண்டும்.

பாடசாலைக்குரிய பாடங்களைப்படித்துக்கொண்டிருந்து, பாடசாலைக்குப் போகவேண்டிய நேரமானதும் பாடசாலைக்குப்போய் உபாத்தியாயருக்கு (நமஸ்காரம்) வந்தனம் செலுத்தவேண்டும். படிக்குங்காலத்தில், 'பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச், சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச், செவிவாயாக நெஞ்சு களனாகக், கேட்டவை கேட்டவை விடாது உளத்தமைத்து,' என்ற விதிக்கிணங்க, பாடம் ஒழிந்த மற்

ஒரு பொருளைப்பற்றி ஞாபகங்கொள்ளாமல், படிக்கும் விஷயம் முழுதும் மனதிற் படும்படி கவனமாய்ப் படிக்க வேண்டும்.

அதிகாலையில் அதிகம் படிக்கவும், சீக்கிரம் ஞாபகம் செய்யவும்கூடும்.

பாடசாலையில் பையன்களோடு பேசாமலும் இடத்தைவிட்டு அடிக்கடி பெயராமலும் இருக்க வேண்டும்.

எப்பொழுதும் படிப்பதிலேயே பராக்காயிருக்க வேண்டும். விளையாட்டில் மனம் செலுத்தக்கூடாது.

பாடசாலை நாள்களிலெல்லாம் தவறாது பாடசாலைக்குப் போகவேண்டும். யாதொரு காலத்தையும் வீணாக்கக்கூடாது.

பாடசாலை விடும்பொழுது உபாத்தியாயருக்கு வந்தனஞ் செய்து, பாடசாலையினின்றும் வெளியேற வேண்டும்.

வழியில் விளையாடாமல் சீக்கிரம் வீட்டிற்கே போகவேண்டும். [illegible]

வீடு சென்றதும், தாய் தந்தையரை வணங்கவேண்டும், பின் உணவு உட்கொண்டு பெற்றோர் பக்கமாய் வீட்டில் தாமதிக்கவேண்டும்.

எவ்விதம் பெற்றோர் கட்டளையிடுகிறார்களோ, அவ்விதமே செய்ய முற்படவேண்டும். முரண்டுபண்ணக்கூடாது, பெற்றோர்க்குத் திருப்தியுண்டாக நடக்கவேண்டும்.

படிக்கப்போகவேண்டிய கா[illegible] பள்ளிக்கூடம் போகவேண்டும்.

கெட்ட பையன்களோடு விளையாடிப் பிரியங்கொள்ளக்கூடாது; மேலும் பள்ளிக்கூடத்துக்குப் போவதில் தாமதம் செய்யக்கூடாது.

## இரண்டாவது இயல்.

### (நண்பர்கற் படிப்பைப்பற்றி)

முன்னர் படித்த பாடங்களைச் [illegible]கும்பொழுதெல்லாம் திருப்பிப்படிக்கவேண்டும். பழம் பாடங்களைத் திருப்பாவிட்டால் அவை மறந்துபோகும்; பெற்றோரும் உபாத்தியாயரும் உன்னைக் கோபிப்பார்கள்.

தன் வகுப்புப் பிள்ளைகளில் முதன்மையாய் இருப்பதற்கும், நன்றாய்ப் படிப்பதற்கும் முயற்சி செய்யவேண்டும். அவர்களுக்குப் பின்னடையக்கூடாது. பின்னடைவது வெட்கத்தை விளைக்கும்.

‘பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல், ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல், அம்மாண்புடையோர் தம்மொடு பயிறல், வினாதல் வினாயவை விடுத்தல்,’ என்ற நூல்பயில் முறைக்கேற்ப, பாடம் ஞாபகம் ஆகிவிட்டால், தனது பாடக்காரப் பிள்ளைகளைக் கேட்கச்சொல்லவேண்டும். இதனால், இருவருக்கும் பாடம் நன்கு ஞாபகமுள்ளதாகும்.

பிரதிவாரத்திய விடுமுறை நாளிலும் அவ்வாரத்தில் நடந்த பாடத்தைக் கவனிக்கவேண்டும். இப்படிக் கவனித்தால் அவ்வாரத்தில் புதியபாடம் எவ்வளவு நடந்திருக்கிறது, எவ்வளவு தூரம் தனக்கு ஞாபகமிருக்கிறது என்பது விளங்கும்.

பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தும், நல்லவிதமாகக் கற்றுக்கொள்ளாவிட்டால், அம்மாணவனின் முயற்சியும் காலமும் வீணா கழிந்தனவாம்.

DR. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
THIRUVANMIYUR, MADRAS-41.

'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்' என்ற நீதிக்கிணங்க, சில மாணவர்களுக்குப் படிப்பதிலும் கற்றுக் கொள்வதிலும முதலில் கஷ்டம் இருக்கிறதாகத் தெரியும்; என்றாலும், எப்பொழுதும் படித்தலுடன் விடாது முயற்சியும் செய்தால், சில நாளில் இலகுவாய்விடும்.

எப்பொழுதாவது தன் பாடத்தில் கொஞ்சம் மறந்து போமானால், உபாத்தியாயரிடத்தில் கேட்கவேண்டும், கேட்க வெட்கப்படக் கூடாது. ஏனெனில், படித்த பாடக்கருத்துக்கள் மனதில் தெளிவாய்ப் பதியப் பெற வேண்டும். பொருளைத் தெரிந்துகொள்ளாமல், பதங்களையும் வாக்கியங்களையும் மட்டும் நெட்டுருப் பண்ணுதல், எவ்வித பிரயோஜனத்தையும் விளைக்காமல், காலத்தையே கெடுப்பதாம்.

அவ்வத்தினத்தில் படித்து முடிக்க வேண்டியவைகளை அவ்வக்காலத்தே முடித்துக் கொள்ள வேண்டும. நாளை நாளை என்று கடத்தி வந்தால் பின்னர் தாங்கக்கூடாத பெரும் பாரமாயும், கஷ்டமாயும் முடியும்.

## மூன்றாவது இயல்.

# எழுதுவதின் ஒழுங்கைப் பற்றி.

பிரதி தினமும் பாடபுத்தகத்திலிருந்து சில பக்கங்கள் பார்த்து எழுதிவரவேண்டும்.

நிரம்ப எழுதிக்கொண்டிருந்தால், சுருக்காகவும் திருத்தமாகவும் எழுதக்கூடும்.

முதலில் எழுத்துக்கள் பெரியவைகளாயிருக்க வேண்டுமாகையால், பெரிய பெரிய எழுத்துக்களைக் கொண்ட காப்பியைப் பார்த்து எழுதவேண்டும்.

எழுதுகோலைச் சரியாய்ப் பிடிக்கவும் செவ்வையாய்க் கற்றுக் கொள்ள வேண்டும்.

திருத்தமாக எழுதப்பட்டிருக்கும் எழுத்தைப் பார்த்து எழுத வேண்டும்.

எவ்விதமாகக் காப்பியில் எழுத்து எழுதப்பட்டிருக்குமோ அவ்விதமே எழுத முயற்சிக்கவேண்டும்.

மைக்கூட்டினின்று மையெடுக்கும் பொழுது, கொஞ்சமாக எடுத்துப் பக்கத்தில் உதறாமல் திருத்தமாக எழுதவேண்டும்.

விரல்களில் மைபடும்படியாகச் செய்துகொள்ளக்கூடாது. உண்ட உடுப்புகளிலும் மையானது படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நல்ல கடிதம் எழுத முயற்சிக்க வேண்டும். ஏனெனில், திருத்தமும் தெளிவும் உள்ள கையெழுத்து ஒருவனுடைய காரிய வெற்றிக்குப் பெருந்துணையாகும்.

---

## நான்காவது இயல்.

## எழுதுவது படிப்பது முதலியவற்றின் நன்மையைப் பற்றி.

மாணவர்களே! பின்வரும் விஷயங்களை நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். எழுதவும் படிக்கவும் நன்றாய்க் கற்றுக்கொள்வதில் அதிக நன்மையும் பெருமையும் உண்டு.

நன்றாய்க் கற்றுக்கொள்ளுகிற பையனிடத்தில் முதலில் அவன் தாய் தந்தையர் அதிகப் பிரியங்காட்டுகிறார்கள், அவனைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைகிறார்கள்.

எவரொருவர் அவனை எழுதப் படிக்கப் பார்ப்பாரோ அவர் அவனை மிகவும் கெட்டிக்காரனென்று புகழ்வார்.

மேலும், அந்தப் பையன் எவ்வளவுக்கு எவ்வளவு பெரியவனாகின்றானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவனுக்கு விருப்பமும் பெருமையும் அதிகமாய் ஏற்படும்.

எழுதப்படிக்க அறிவதனால் மனிதனுக்குத் தன்னுடைய மார்க்க விதிகள் புலனாவதுடன், புத்தியும் விசாலமடையும்.

புஸ்தகங்களில் பல நல்ல பேச்சுகளும், பெரியோர்களின் சரிதை நிலைமைகளும், எழுதப்பட்டிருக்குமாதலால் அவற்றை வாசிக்க அறிவு விருத்தியாகும்.

ஏழைகள் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டால் அது அவர்களின் பிழைப்புக்கு உதவி ஒத்தாசையாகிறது.

மற்றவர்களுக்கும் படிப்பு, தங்கள் பொருள் சம்பாத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் துணையாவதுடன், கைவசப் பொருளையும் விர்த்திபண்ணும்.

யாருக்கு எழுதப்படிக்க வரவில்லையோ, அதாவது எவனொருவன் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளவில்லையோ அவன், தனக்கு யாதாம் தொழில் ஏற்பட்டபொழுது. ஜனங்கட்கு முன்னிலையில் வெட்கத்தை யுறுவான்.

எழுதப்படிக்கஅறிந்த காரணத்தினால்எவ்வளவோ ஏழைகள் தகுந்த வாழ்வு உடையவர்களாயிருக்கிறார்கள்.

எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டவர்களுக்கு எதிர்வரும் ஒரு வேலை அதிர்ஷ்டமாகும்.

'இளமையிற் கல்' என்ற வாக்குக் கிணங்க, இளமைப்பருவமே கற்பதற்கேற்ற காலம். அதைக்கோ

ம்பேறித்தனத்திலும் விசனத்திலும் வீணாக்கக்கூடாது; ஏனெனில், கழிந்துபோன காலம் மீண்டும் நமக்கு வர மாட்டாதன்றோ?

இளம் பிராயத்தில் எவ்வளவு கொஞ்சம் அறிவு தொழில் கற்றுக்கொண்டாலும் அவை வாழ்நாளளவும் உனது ஞாபகத்தில் இருக்கும்.

பெரிய வயதில் கற்பதும் ஞாபகம் செய்வதும் அதிகக் கஷ்டமாய்த் தெரியும்.

இளம் பிராயத்தில், கற்றுக் கொள்வோமானால், அது அதிக வயது காலத்தில் ஜீவனத்திற்கான வேலைக்கு உதவியாம். கல்வி தொழில் இவற்றைக் கற்றுக் கொள்கிற பாக்கிய முடையவன் தன் பெற்றோர் பொருளையும் ஐஸ்வரியத்தையும் விருத்தி செய்பவனாம்.

பொருள் தனத்தின் பேரில் நிரம்ப ஆபத்து வருகிறது; திருடர் கொண்டு போய் விடுவார்கள், அழிந்து போகும், வியாபாரத்தில் முழுகிவிடும்; கல்வியானால் [illegible]

ழிக்கோட்படாததும், வாய்த்தீயிற் கேடில்லாததும், மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வாததும், ஆகை கல்வி என்ன, தொழில் என்ன இவற்றின் வாழ்விற்கு எப்பொழுதும் எந்த விதமான ஆபத்தும் உண்டாகிற தில்லை.

சிறு பருவத்தில் தானே, கற்றுக்கொள்வதில் நிரம்ப முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், நீ பெரியவனாகிறதற்குத் தகுதியாகவே உன் அறிவும் கல்வியும் அதிகமாகிக் கொண்டே யிருக்கும்.

எவன் இளமையிலேயே கற்றுக்கொள்ளாமற் காலந்தள்ளினானோ, அவன் பெரியவனா யிருக்கிறபொழுது [illegible]கசேதப்படுவான்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாத ஆறு." என்றதற் கிணங்க, மனிதன் எவ்வளவு நிரம்பக் கல்வி கற்றிருக்கிறானோ, அவ்வளவுக்கு அவனுக்குப் பயனுண்டாம், கல்வியி னால் மனம் வெளிச்சமடைகிறது. உலகத்தாரும் கற்றவனையே மதித்தொழுகுவார்.

## ஐந்தாவது இயல்.

### நித்திரைக்குச் செல்லல் எழுதல் விஷயமாக.

அந்திப்பொழுதில் சந்தியா வந்தனம் செய்து கடவுளைத் தியானித்தபின், மறுநாட் பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கவேண்டும். படித்து முடிந்து சாப்பிட்டதும் சிறிது நேரம் உலாவிப்பின் தூங்கப் போகவேண்டும். இராத்திரி நிரம்ப நேரம் பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

நிரம்ப நேரம் விழித்துக்கொண்டிருக்கக் கூடாது. ஏனெனில் அதிகம் விழிப்பதினால் மனிதருக்குத் தீங்கு உண்டாகிறது.

நித்திரை வரவில்லையானாலும், படுக்கையின் பேரிலாவது படுத்திருக்க வேண்டும். தூக்கம் வருமட்டும் கடவுளைக் குறித்துத் துதித்துத் தியானிக்கலாம்.

பின்பு காலையில் சீக்கிரம் எழுந்திருக்கவேண்டும். சோம்பேறித்தனமாய்ப் படுக்கையிலேயே படுத்திருக்

கக் கூடாது. சூரியோதயத்திற்குச் சில நாழிகை முன்னராகவே எழுந்திருக்க வேண்டும்.

காலை நேரம் நிரம்பப் பரக்கத்தானது அதாவது நன்மை பெருகக் கூடியதானது. அதை உறக்கத்திலும் விசனத்திலும் போக்கக்கூடாது.

உறக்கத்தினின்று விழித்தவுடனே கடவுளை ஞாபகம் செய்யவேண்டும். அவரிடத்தில 'எனது ஆண்டவனே! எல்லா நாளையும நலல நாளாக்குக, என்னுடைய கல்வி புத்தி இரணத்திலும் அநுக்கிரகஞ் செய். எவ்வுலகத்தையும் படைத்தாளும் ஆண்டவனே! என் எளியவேண்டுகோளை யெல்லாம் நின்ற வேற்றிலவை' என்று பிரார்த்திக்க வேண்டும்.

காலை நேரத்தில் ஒருபோதும் தூங்கப்படாது. இந்நேரத்தில் கடவுளுடைய ஞாபகத்திலும் வணக்கத்திலும் கவனமாயிருக்க வேண்டும். காலை நேரத்தில் தூங்குவது மிகவும் கெடுதியாயிருக்கிறது, பாக்கியமழித்து துர்அதிர்ஷ்டம் வரககாரணமாகிறது.

சூரியோதயமானதும் பாடத்தைத் ஞாபகம் செய்வதிலும், கல்வியைக் கற்றுக்கொள்வதிலும் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்.

---

ஆறுவது இயல்.

## கடவுள் மகிமை முதலியவற்றைப் பற்றி,

கடவுள் யாவற்றையும் படைக்கிறவராயும் போஷிக்கிறவராயுமிருக்கிறார்.

எல்லாம் அவருடைய கட்டளையின்படி உண்டானதாயும், உண்டாயிருக்கிறதாயும், உண்டாவதாயும் இருக்கிறது.

அவரை, எல்லாவற்றையும் படைக்கின்றவர் என்றெண்ணி வணங்கவேண்டும்.

அவருடைய அநுமதியின்றி யாருக்கும் எதையும் செய்யச் சக்தி கிடையாது.

ஒவ்வொரு வேலையாரம்பத்திலும் கடவுளுடைய உதவி அநுக்கிரகத்தை நாடவேண்டும்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41

பிரதிமனிதனும் கடவுளிடத்தில் "சர்வேஸ்வர! என்னுடைய குற்றத்தைப் பிழை பொறுக்கக் கேட்கின்றேன். என்னுடைய பாவத்தை மன்னிக்கவும், நான் எனது பாவச்செய்கைக்காகப் பச்சாத்தாபப் படுகின்றேன்; இனிமேல் பாவம் செய்யேன். என்னுடைய பிரார்த்தனையை ஒப்புக்கொள்வதுடன் எனக்கு நேர் வழியையும் காட்டுக" என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.

தன்னால் யாருக்கும் கொஞ்சம் பிழை ஏற்பட்டு விடுமானால் உடனே அவரிடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டும். இதற்கு வெட்கப்படக்கூடாது.

எந்த விஷயத்தைப் பிழை பொறுக்கக் கேட்டாயோ அதைப் பின்னரும் செய்யக்கூடாது. அப்படிப் பட்ட பிழையை மீண்டும் செய்யாதிருக்க ஓர்மைகொள்ள வேண்டும். அப்பொழுது, அந்தப் பிழை பொறுத்தல் ஆண்டவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும்

எப்பொழுதும் பிழை பொறுக்க முயலவேண்டும். இதனால் மனமானது விசனம் கவலை விட்டுச் சமாதானத்துடன் பிரகாசமுடையதாகிறது.

கடவுளை எப்பொழுதும் ஞாபகம் செய்து வழிபடவேண்டும். விரதங்களை அனுஷ்டிப்பதில் தளர்ச்சியாவது விசனமாவது கொள்ளக்கூடாது. விசனமற்ற மனதிற்கு மதிப்பும் அழகும் ஏற்படுகின்றன.

முஹம்மதிய மதத்தவர்களுக்கு எப்படி ஐந்து காலத் தொழுகை பறுது அதாவது கட்டாயமானதாயிருக்கிறதோ அதுபோல பிறமதத்தவர்க்கும் ஏற்பட்டிருக்கும் வழிபாட்டுக் காலங்களில் அவரவர்கள் தவறாது ஊக்கமன்புடன் கடவுளை வணங்க வேண்டும். வணக்க காலத்தில் விசனமாவது ஊக்கக்குறைவாவது உண்டானால், துரதிர்ஷ்டம் தொடர்ந்துவிடும்.

முஹம்மதியர்கள் சாதாரண நாட்களில் முயற்சியுடன் பள்ளிக்குப் போய்த் தொழுதும், ஜும்ஆ அதாவது வெள்ளிக்கிழமை தினம் விசேஷமாய்க் குளித்துத்

துப்புரவான உடை உடுத்தித் தொழுதும் வரவேண்டுமென்றிருப்பது போல, பிரதி மதஸ்தருமே, அவரவர் மதநூல்களிற் சொல்லியிருக்கும் ஆலய வழிபாட்டு முறையைப் பின்பற்றியே கடவுளை வணங்கக் கோயில்களுக்குச் செல்லவேண்டும்.

கடவுளுக்கு எப்பொழுதும் பயந்திருக்க வேண்டும். ஒருவன் தன்னிட மிருக்கும் காசு பணம் ஆண்மைத் தனம் முதலியவற்றால் பெருமை பாராட்டக் கூடாது.

கடவுளுடைய கோபத்திற்கு ஆளாகாமல் நடந்து கொள்ளவேண்டும். சர்வ வல்லமையுள்ள அவர், யில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ' என்றபடி, அணுவை மேருவாகவும், மேருவை அணுவாகவும், மிக்க வறிஞனைக் குபேரசம்பத்துடையவனாகவும், குபேரசம்பத்துடையவனைக் குசேலர் வறுமையினும் கொடிய வறுமையுடையவனாகவும் செய்துவிடுவர்.

கடவுள், பிறர் முன்னிலையில் தன் பெருமை மறையப் பணிவுடன் நடந்து கொள்கிற நல்லொழுக்க முள்ளவனிடத்தில் மிக்க பிரியங்காட்டுகிறார்.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்றிருப்பதால், யாருக்கும் துன்பங் கொடுக்கவாவது தீங்கு சொல்லவாவது கூடாது. பிறரைக் கெடுக்கவும முயலல் ஆகாது.

'சாவாத இல்லை பிறந்த உயிரெல்லாம்' என்ற படி மண்ணிற் பிறந்த நாமெல்லாம் மரித்து விடுவோம். மரித்த பின் பிரதி உயிரும் கடவுள் முன்னிலையில் தான் தான் பூமியிற் செய்த நன்மை தீமைகளுக்குக் கணக்குச் சொல்லவேண்டும்.

"புண்ணியம் ஆம் பாவம்போம்போனநாள் செய்தவவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்"

ஆதலால் அவரவர் செய்த நன்மைகளு இன்பமும் தீமைக்குத் துன்பமுமே பலனாக அனுபவிக்கக் கிடைக்கும். ஆதலின் தீமையைச் செய்யாது நன்மையையே செய்வாயாக.

## ஏழாவது இயல்.

## நல்ல வுணக்கம், தீச்செயல் இவற்றைப் பற்றி

'தொழிய நன்மை செயல்' என்றபடி பூமியில் எப்பொழுதும் நற்கருமத்தையே செய்யவேண்டும். கெட்ட செய்கையினின்றும் விலகியிருக்க வேண்டும்.

நன்மைக்குப் பகரம் அல்லது பலன் இம்மையிலும் மறுமையிலும் உண்டாகும். அதே விதமாகத் தீமைக்குத் தண்டனை இகத்திலும் பரத்திலும் கிடைக்கும்.

எவன் நல்ல காரியம் செய்து இறந்து போகின்றானோ அவனைக் கடவுள் சுவர்க்கத்தில் வைப்பார், அங்கே எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும். அவனுக்குச் சுவர்க்கத்தின் கனிகள், நல்ல உணவு பானம், சுகபோகமும் கிடைக்கும்.

எவன் கெட்ட கருமம் பாவச் செயல் செய்கின்றானோ அவனை, மரித்த பின்னர் கடவுள் நரகத்தில் போ

ட்டு விடுவார். அவ்விடத்தில், எரிந்து கரிந்து, கடினமான துன்பம் நோவினையில் அகப்பட்டுக்கொள்வான்.

ஒருபொழுதும் பொய் பேசக்கூடாது. இது கடவுளிடத்தில் பெரும்பாவம, இன்னும் மனிதர் சமுகத்திலும் பொய்யனுக்குக் கொஞ்சமும் பெருமையில்லை.

இன்ன மனிதன் பொய் சொல்லுகிறு னென்று ஒரு வேளை தெரிந்து விடுமானல், அப்பொழுது அவன் மெய்சொன்னபோதிலும், அவன் வார்த்தையை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

பொய் பேசுகிறதினல், பிரயோஜன காரியமுண்டு என்பதையும், பின்னர் கஷ்டமுண்டாகும் என்பதையும் ஒரு மடையனும் நன்கு அறிந்துள்ளான்.

பொய்யனுக்கு எவரும் உதவி செய்யக்கூடாது. உதவி செய்தவருக்கே தாழ்வுண்டாகிவிடும்.

யாருக்காவது வாக்குறுதி செய்திருந்தால், அதனை நிறைவேற்ற வேண்டும். மெய் சொல்லுகிறதினாது

கடவுளுக்கும் மனிதருக்கும் நிரம்பப் பிரியமாயிருக்கும்.

ஒருவருக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி தவறாது செய்யவேண்டும், தன்னால் முடியாத காரியமென்று தெரிந்தால், முதலில் வாக்குறுதி நம்பிக்கை கொடுக்க முற்படலாகாது

பிறருடைய பொருளைத் திருடுதலும் கடவுளிடத்தில் பெரும் பாவமான காரியமே.

திருட்டுத்தனம் ஒருவேளை யில்லாவிடினும் ஒருவேளை வெளியாகத் தெரியவரும் அப்பொழுது திருடியவன் மரியாதைக் குறைவுடன் தண்டனையையும் அடைகின்றான்.

பொய் சொல்லுகிறவனைப் போலவே திருட்டு வேலைக்காரனும் தனது தீய செய்கைத் தொடர்ந்தியாகில் நிச்சயமாகவே ஒருவேளை வெளிப்பட்டுத் தண்டனையையும் இகழ்ச்சியையும் பெறுகின்றான்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றபடி ஒருவனுக்கு இளம்பருவத்தில் என்ன நல்ல பழக்கம் அல்லது தீப்பழக்கம் ஏற்பட்டதோ, அதே, வயது முற்றியும் ஏற்பட்டதாகிறது. ஆகையால் நற்பழக்கத்தையே கைக்கொண்டொழுக வேண்டும்.

தன் மனதுக்குத் திருப்தி தராத எவ்விதப்பொருளையும் அடுத்தவருக்குக் கொடுத்துபசரிக்க நாடக்கூடாது.

மனதில் எப்பொழுதும் கடவுளுடைய பயத்தை வைக்கவேண்டும்; பாவ காரியம் செய்யப்படாது.

கடவுள் சர்வஞ்ஞரும், சர்வ வல்லவரும், சர்வ வியாபகரும் ஆனபடியால், யாவற்றையும், மறைவான விஷயத்தையும் நன்கு உணர்ந்திருக்கிறார்.

கடவுளுடைய குணங்களையும் வல்லமைகளையும் ஒவ்வொருவரும் தெரிந்து, தம்முடைய காரியத்தை எல்லாம் கவனித்து வருகின்ற அவரிடத்தில் பிரியமுண்டாகும்படி நடந்துவரவேண்டும்.

## எட்டாவது இயல்.

## பெற்றோர் முதலிய தாவர்களிடம் மரியாதையாய் ஒழுகுதலைப்பற்றி.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' ஆனபடியால், தாய் தந்தையர்க்கு நிரம்ப மரியாதை செய்ய வேண்டும், அவர்கள் உத்திரவின்படி நடக்கவேண்டும்.

'கடவுளை வருந்திச் சூலாய்க் கைப்புறு உண்டனந்தம்
இடர்களுற் றுதரம் தன்னில் ஈரைந்து திங்கள் தாங்கிப்
புடவியில் ஈன்று பன்னாள் பொற்புறப் பாலூட்டித்
திடமுறவளர்த்துவிட்டசெவிலியைவணங்காய்நெஞ்சே'

என்றபடி பெற்றோர் உங்களை வளர்க்கிறதற்காக நிரம்பக் கஷ்டமும் முயற்சியும் எடுத்திருக்கிறார்கள்.

நீங்கள் உங்கள் சிறு பிராயத்தில், அழுகிறதைத் தவிர வேறொன்றும் செய்யக்கூடாத நிலைமையிலிருந்த பொழுது, பெற்றோர் உங்களைப் [illegible] பா[illegible] வளர்த்திருக்கிறார்கள்.

உங்களுக்குச் சாப்பிடக் குடிக்கக் கொடுத்து, எல்லா விஷயத்திலும் உங்களை நன்கு பாதுகாத்து வந்துள்ளார்கள்.

இப்பொழுது கொஞ்சம் அறிவு பெற்றுள்ள நீங்கள் அவர்களுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து ஒழுங்காய் ஒழுகக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

உங்கள் பெற்றோர்கள் சொல்வதெல்லாம் உங்களுடைய நன்மைக்காகவேயாகத்தானிருக்கும். அவர்களைப் போல உங்கள் நன்மையைக் கருதுபவர் வேறொருவருமில்லை.

எந்தப் பேச்சிலும் அவர்களுக்குக் கெடுதி செய்யக் கூடாது. கெடுதி செய்வது நிரம்ப கெட்டதாயும் கொடுமையான பாவமுமாயிருக்கிறது.

உலகத்தில் தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய் [illegible] யோருக்கும் மரியாதை [illegible]

உபாத்தியாயர் சொல்லும் கட்டளைகளை யெல்லாம் மனதாரவே ஒப்புக்கொள்ளுதலே, கல்வியைக் கற்பதின் அடையாளமாம்.

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் உத்தரவை எவ்விதம் மரியாதையுடன் ஒப்புக்கொள்ளுகிறீர்களோ, அவ்விதமே சட்டம்பிள்ளை (Monitor) யின் உத்தரவையும் மரியாதையுடன் கொண்டொழுக வேண்டும்.

ஒருவன் தன்னிலும் மூத்தவனாக விருந்தால் அவனுக்கு ஒழுக்கத்து மரியாதை செய்யவேண்டும்.

தன்னைவிடப் பெரியவர்களிருக்கும்பொழுது முன்னி லையில சத்தமிட்டுப் பலமாய்ப் பேசக் கூடாது, சிரிக்க வும் கூடாது. எவர் தனக்குச் சரியானவராக இருக்கி றாரோ அவரோடு சந்தோஷமாயும், மெதுவாயும் பேசிப்பழகவேண்டும்.

பெருமையடையும்படி பேசக்கூடாது. [illegible] விசாரம் செய்யக்கூடாது.

## நிதானத்திரட்டு.

மற்றவர்களைப்பற்றிய யதார்த்தமான பேச்சைத் தாழ்ப்பிராயத்துடனும், மெதுவாகவும் சொல்லவேண்டும். பயந்து பயந்து சொல்லக்கூடாது.

எவரையும் கோபிக்கக் கூடாது. கோபத்தில், பிறர் மனதை வருத்தி நோகச் செய்யும்படியான சொல்லைச் சொல்லலாகாது. கோபகாலத்தில் பேசாமல் சும்மா இருப்பது தான் நன்மையானது.

யாராவது ஒருவருக்கு நல்லுபதேசங்கள் கூறினால், அவற்றைக் கேலியாகப் பாராட்டாமல், அவரிடத்தில் நன்றியெல்லாம் தங்கள் ஒருமையைக் காட்டவேண்டும்.

தனது சகோதர சகோதரி, கூட்டாளி முதலியவர்களிடத்தில் விசுவாசமாயும் பிரியமாயும் ஒற்றுமையாயுமிருக்கவேண்டும்.

---

## ஒன்பதாவது இயல்.

## சகவாசம் சிநேகத்தைப் பற்றி.

பாடசாலை வீட்டிலும், நல்ல பையன்களோடு சகவாசம் செய்யவேண்டும், மேலும் [illegible] நல்லொழுக்கமான பேச்சுக்கள் பேசவேண்டும்.

தேவடியாள் வீட்டுக்குப் போகிறவன், குடிகாரன், சூது விளையாடுகிறவன் இவர்களுடன் சேர்ந்திருக்கவும், திரியவும் கூடாது. அப்படிச் சேர்ந்து திரிந்தால், உனக்கும் அவ்விதம் செய்யப் பிரியமுண்டாகி விடும்.

'இணக்கமறிந்து இணங்கு' என்றபடி முதலில் மனிதர்களுடைய நடையுடை பாவனையைப் பார்த்து, அவை நன்மையாயின் அங்ஙனம் செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். நல்ல மாணவர்களோடு சினேகம் கொண்டு, அவர்களிடத்தில் பிரியமாயும் சகோதரமாயும் இருக்கவேண்டும்.

எப்பொழுதாவது எவரோடாவது நட்புச் செய்துவிட்டாயானால், 'கூடிப்பிரியேல்' என்ற வாக்கியப்படி எப்பொழுதாகிலும் பகைமை பாராட்டிப் பிரியக் கூடாது.

சினேகத்தினால் மனிதனுடைய மனதிற்குச் சந்தோஷம் [illegible] சினேகத்தை [illegible] க்கூடாது.

ஆனால், யாது காரணத்தாலாவது உழன்றுவிடுமானால், சீக்கிரம் அறிந்துகொள்ளவேண்டும். மோசத்தை நிரம்ப நீளமாக்கி வைக்கக்கூடாது.

ஒருவனிடத்தில் சிநேகத்தை முறித்து இரண்டாவது மூன்றாவது பேரோடு சிநேகம் செய்வது, மிகவும் கெட்ட வழக்கமும் நன்றி யற்றதுமானது. அவ்விதம் செய்யக்கூடாது.

சிநேகிதரிடத்தில் பிரியமாயிருக்க வேண்டும். மேலும் ஒருவர் மற்றவரோடு சங்கையுடன் சந்தோஷமாயிருக்கவேண்டும்; இதனால் மனதிற்குத் தறிபாடும் ஜீவனத்திற்கு அலங்காரமும் இருக்கின்றன.

---

பத்தாவது இயல்.

## பொறுமை நன்றி ஜீவனத்தின் விபரத்தைப் பற்றி.

கடவுள் எதைத் தனக்கு அநுபவிக்கக் கொடுத்திருக்கிறாரோ அதில் திருப்தியடையவேண்டும்; பொறுமை செய்யவேண்டும்.

மற்றப் பையன்களுடைய நல்ல வஸ்திரம், நகையைப் பார்த்து, தாய் தந்தையரிடத்தில் அப்படிப்பட்டவை தனக்கும் வேண்டுமென்று அழக்கூடாது. மேலும் பெற்றோர்களினின்றும் நீங்கக்கூடாது.

தன்னிலும் நிரம்பத் தாழ்மையாயும், எளியவராயும் இருப்பவரைப் பார்த்து, அவர்களிடத்தில் கிருபை இரக்கம் வைக்கவேண்டும்.

எந்த நிலைமையில், கடவுள் நம்மை வைத்திருக்கிறாரோ அதற்காக நன்றி பாராட்டவேண்டும்!

ஒவ்வொருவனும் கடவுளிடத்தில் "இறைவ! நீர் எனக்கு எதை அநுபவிக்கக் கொடுத்தீரோ, அதை நான் பொறுமையுடன் ஒப்புக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறேன். உம்முடைய உபகாரத்தை என்றும் எதிர்பார்த்திருக்கிறேன்!" என்று நன்றி கூறிப் பிரார்த்திக்க வேண்டும்.

கடவுளிடத்தில் நன்றி பாராட்டுவதைப்போலவே உபகாரம் செய்துள்ள மனிதர்களிடத்தும் நன்றியறிதல் உடையவர்களாயிருக்கவேண்டும்.

தேகசௌக்கியத்தைக் கவனித்து, கொஞ்சம் ...ாக்கம் அல்லது துன்பம் வந்துவிடுமானால், அது நீங்குவதற்காகக் கடவுளிடத்தில் பிரார்த்தனை செய்துகொள்ளவேண்டும். கடவுளுடைய கிருபையில் உறுதிகொண்டு, அவர் சக்தியைப் பழிக்காது, மருத்துவஞ் செய்யும்பொழுதும், கடவுள் கிருபை செய்வார் என்றே பொறுமையுடன் எதிர்பார்த்திருக்கவேண்டும்.

'அறஞ்செய விரும்பு' 'ஐயமிட்டுண்' என்ற நீதிவாக்கியங்களுக்கு இயைய, தன்னாலியன்ற அளவு மறையாமல் தருமம் செய்ய வேண்டும். ஏழைகளுக்குக் கொடுத்துதவுவதால், ஒருவனுக்கு ஏற்பட்டுள்ள கெடுதி துன்பங்கள் நீங்கி விடுகின்றன.

தன்னால் யாருக்காவது துன்பம் உண்டாகிவிடுமானால், அவரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

யாராவது தனக்கு ஒரு தீங்கு செய்தால், அதை யானையைப் போல் ஞாபகத்தில் வைத்திருந்து, சமயம் பார்த்துப் பதில் தீங்கு செய்யக் கருதக்கூடாது.

குருடு சப்பாணிகளிடத்தில் கிருபை வைத்து, தன் நிலைமைக்குத் தக்கபடி உபகாரம் செய்யவேண்டும். பெரிய மனிதர்களுக்கு ஊழியம் மரியாதை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான், நீ பெரியவனாகும்பொழுது மற்றவர்களும், உனக்கு ஊழியம், மரியாதை செய்வார்கள்.

யாராவது கொஞ்சம் லாபமுடையவரானால் அது விஷயத்தில் பொறாமை எரிச்சல்படக்கூடாது.

ஏழை, சக்தியற்றவர்களுக்கு யாராவது தீமை செய்யக்கண்டால், தன்னால் கூடுமான வரையில் அதனை விலக்கிக் காக்க முயலவேண்டும். இப்படிச் செய்வதில் மிகுந்த நன்மையுண்டு.

தன்னிடம் ஏதாவது கொஞ்சம் ஏற்று இறந்தவர்க்கு இல்லை யென்னாது இயன்ற அளவால் கொடுக்க வேண்டும். இயல்வது கரக்கக்கூடாது.

எவரிடத்திலும், எப்பொருளையும் கேட்க எண்ணக்கூடாது. 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

தன்னுடைய பழம் பொருளைப் பிறருடையபுதிய பொருளைப் பார்க்கிலும் சிறந்ததாகக் கருதவேண்டும்.

தன்னிடத்திலுள்ள பொருளிற் றிருப்தி யடைவதே சிறந்த செல்வம். இருப்பதைக் கொண்டு விருத்தி செய்யவேண்டும். ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு என்பதைக் கைக்கொள்ளவேண்டும்.

பொறுமையில் நிரம்ப சௌக்கியம் ஐஸ்வரியம், உண்டு. காலக்ஷேபம் பெரிய வாழ்வாயிருக்கிறது; மேலும், தாழ்மை மரியாதை உடையதாயிருக்கிறது.

முதற் பாகம் முற்றியது.

மெய்கண்டான் பிரஸ், மதுரை.